**தரைகட்டுப்பாட்டு மையம் மற்றும் போர்க்கப்பல் கட்டுப்பாட்டில் தபஸ் ஆளில்லா விமானம் வெற்றிகர பரிசோதனை**



தபஸ் ஆளில்லா விமானம்

**பெங்களூரு:** உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தபஸ் ஆளில்லா விமானத்தை, தரைகட்டுப்பாட்டு மையம் மற்றும் போர்க்கப்பல் கட்டுப்பாட்டில் சுமார் மூன்றரை மணி நேரம் இயக்கி ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (டிஆர்டிஓ) சாதனை படைத்துள்ளது.

ராணுவ பயன்பாட்டுக்காக தபஸ் என்ற ஆளில்லா விமானத்தை டிஆர்டிஓ உருவாக்கியது. இதை தரைக்கட்டுப்பாட்டு மையம் மற்றும் போர்க்கப்பலின் கட்டுப்பாட்டில் பறக்கவிடும் சோதனையை டிஆர்டிஓ கடந்த 16-ம் தேதி மேற்கொண்டது.

இதற்காக கர்நாடகாவின் சித்ரதுர்கா மாவட்டத்தில் உள்ள ஏரோனாடிக்கல் சோதனை மையத்தில் (ஏடிஆர்) இருந்து தபஸ் ஆளில்லா விமானம் புறப்பட்டது. இந்த இடம் கர்நாடகாவில் உள்ள கர்வார் கடற்படைத் தளத்திலிருந்து 285 கி.மீ தொலைவிலும், பெங்களூரிலிருந்து 200 கி.மீ தொலைவிலும் உள்ளது. ஆளில்லா விமானத்தின் கட்டுப்பாட்டை தரைகட்டுப்பாட்டு மையத்திலிருந்து போர்க்கப்பலுக்கு மாற்றுவதற்காக, ஐஎன்எஸ் சுபத்ரா என்ற போர்க்கப்பல் கர்வார் கடற்படைதளத்திலிருந்து 148 கி.மீ தொலைவில் நிலைநிறுத்தப்பட்டது. சித்ரதுர்காவில் உள்ள பரிசோதனை மையத்தில் இருந்து கடந்த 16-ம்தேதி காலை 7.35 மணிக்கு புறப்பட்ட தபஸ் ஆளில்லா விமானம், 20,000 அடி உயரத்தில் சுமார் மூன்றரை மணி நேரம் பறந்தது.

இதில் 40 நிமிடங்கள் ஐஎன்எஸ்சுபத்ரா போர்க்கப்பலின் கட்டுப்பாட்டில் விமானம் பறந்தது. இதற்காக இரண்டு கப்பல் தரவு டெர்மினல்கள் போர்க்கப்பலில் பொருத்தப்பட்டிருந்தன. வானில் மூன்றரை மணி நேரம் பறந்த பின்பு சித்ரதுர்காவில் உள்ள பரிசோதனை மையத்தில் தபஸ்

ஆளில்லா விமானம் வெற்றிகரமாக தரையிறங்கியதாக டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

தபஸ் ஆளில்லா விமானம், எஸ்ஏஆர் என்ற ரேடாருடன் 30 ஆயிரம் அடி உயரத்தில், 24 மணி நேரம் பறக்கும் திறன் வாய்ந்தது. இதன் மூலம் நடுவானில் இருந்து 250 கி.மீ தூர பகுதியை கண்காணிக்க முடியும். பாதுகாப்பு படைகளின் உளவு மற்றும் கண்காணிப்பு பணிக்காக தபஸ் ஆளில்லா விமானம் தயாரிக்கப்பட்டது. இந்த விமானம் இஸ்ரேலின் ஹெரான் ஆளில்லா விமானத்துக்கு நிகரானது என டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

## பருவநிலை மாற்ற விவகாரம் | 3வது ஜி20 நிலையான நிதி செயற்குழு கூட்டம் மாமல்லபுரத்தில் தொடங்கியது




மாமல்லபுரத்தில் நடைபெற்று வரும் ஆலோசனைக் கூட்டம்


**சென்னை:** பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நிதி ஆதாரம் குறித்த ஜி20 அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் மாமல்லபுரத்தில் தொடங்கியது.

ஜி20 அமைப்புக்கு இந்தியா தலைமை வகித்து வரும் நிலையில், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நிதி ஆதாரம் குறித்து ஆலோசிப்பதற்கான மூன்றாவது நிதி செயற்குழு கூட்டம் மாமல்லபுரத்தில் தொடங்கியது. நிலையான நிதி செயற்குழு (SFWG) கூட்டத்தின் முதல் கூட்டம் கவுகாத்தியிலும், இரண்டாம் கூட்டம் உதய்பூரிலும் நடைபெற்ற நிலையில், 3வது கூட்டம் மாமல்லபுரத்தில் தொடங்கி உள்ளது. இதில், பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவது குறித்தும், நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக நிதியை செயல்படுத்துவது

குறித்தும், சுற்றுச்சூழல் அமைப்பின் திறனை வலுப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டு வருகிறது.

பசுமை மற்றும் குறைந்த கார்பன் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வதற்கான தனியார் மூலதனத்தை ஆதரிக்கும் கொள்கைகள் மற்றும் நிதிக் கருவிகள் ஆகியவை குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வியாளர்கள், சிந்தனைக் குழுக்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர். நிலையான நிதி செயற்குழு கூட்டத்தின் முக்கிய நிகழ்வாக மக்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதல் நாளின் தொடக்க அமர்வில் சர்வதேச பொருளாதார உறவுகளுக்கான இந்தியத் தலைவர் கீது ஜோஷி, பொருளாதார விவகாரத் துறையைச் சேர்ந்த சாந்தினி ரெய்னா ஆகியோர் உரையாற்றினர். இந்த 3 நாள் கூட்டத்தில் சீனா, அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

**தமிழக பரத நாட்டிய கலைஞருக்கு பிரதமர் புகழாரம்**



ஆனந்தா சங்கர் ஜெயந்த்

**புதுடெல்லி:** மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் பிரதமர் மோடி நேற்று கூறியதாவது:

மனதின் குரல் நிகழ்ச்சி ஒன்றில் கதை சொல்லுதல் குறித்து விவாதித்திருந்தோம். அந்த நிகழ்ச்சியால் உத்வேகம் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த பரத நாட்டிய கலைஞர் ஆனந்தாசங்கர் ஜெயந்த், குழந்தைகளுக்காக பல்வேறு கதைகளை தொகுத்துள்ளார். இதன்மூலம் நமதுநாட்டின் கலாச்சாரம் மீது குழந்தைகளுக்கு ஆர்வம் ஏற்படும்.

கதைகளின் சில சுவாரசியமான காணொலிகளையும் அவர் தனது யூடியூப் சேனலில் பதிவேற்றம் செய்திருக்கிறார். தனது திறமையால் நாட்டுக்கும்

சமூகத்துக்கும் ஆனந்தா சங்கர் ஜெயந்த் சிறந்த பங்களிப்பை வழங்கியிருக்கிறார்.

மழைக்காலம் என்பதால் அளவோடு சாப்பிடுங்கள், ஆரோக்கியமாக இருங்கள். நாள்தோறும் யோகாசனம் செய்யுங்கள். கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டு உள்ளன. மாணவ, மாணவிகள் வீட்டுப்பாடத்தை குறித்த நேரத்தில் நிறைவு செய்யுங்கள், இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**யார் இந்த ஆனந்தா சங்கர்**

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்டவர் ஆனந்தா சங்கர் ஜெயந்த் (61). பரதநாட்டியம், குச்சிப்புடி நடனக் கலைஞர். தெற்கு மத்திய ரயில்வேயின் போக்குவரத்து சேவை முதல் பெண் அதிகாரி என பல்வேறு முகங்கள் கொண்ட இவர் கடந்த 2020-ம் ஆண்டு இறுதியில் குட்டி கதைகள் என்ற பெயரில் வீடியோ தொகுப்பை வெளியிட்டார். 6 முதல் 13 வயது குழந்தைகளுக்காக வெளியிடப்பட்ட வீடியோ தொகுப்பில் ஒவ்வொரு வீடியோவும் 5 நிமிடங்கள் ஓடக்கூடியது. இது குழந்தைகள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதற்காக ஆனந்தா சங்கர் ஜெயந்தை பிரதமர் நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

**காசநோயை 2025-க்குள் ஒழிப்போம்: 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உறுதிபட தெரிவித்தார்**



**புதுடெல்லி:** இந்தியாவில் இருந்து 2025-ம் ஆண்டுக்குள் காசநோயை முற்றிலுமாக ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

102-வது 'மனதின் குரல்' ('மன் கீ பாத்') நிகழ்ச்சி நேற்று ஒலிபரப்பானது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

வழக்கமாக, மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் 'மனதின் குரல்' நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது. அடுத்த வாரம் அரசுமுறை பயணமாக நான் அமெரிக்கா செல்வதால் ஒரு வாரம் முன்னதாகவே இந்த நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது.

பிபர்ஜாய் அதிதீவிர புயலால் குஜராத்தின் கட்ச் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், அப்பகுதி மக்கள் மிகுந்த மனஉறுதியுடன் இதை எதிர்கொண்டனர். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு பூகம்பத்தால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீண்ட கட்ச் பகுதி, புயல் பாதிப்புகளில் இருந்தும் விரைவில் மீண்டெழும்.

இப்போது பருவமழை காலம் தொடங்கியுள்ளது. இந்த காலத்தில் மழைநீரை சேமிக்க வேண்டும். உத்தர பிரதேசத்தின் பாந்தா மாவட்டம் லுக்தரா கிராமப் பஞ்சாயத்தின் தலைவராக உள்ள துளசிராம் யாதவும், கிராம மக்களும் சேர்ந்து 40-க்கும் மேற்பட்ட குளங்களை வெட்டினர். இதனால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, சாகுபடி அதிகரித்துள்ளது. வறட்சி, குடிநீர் பிரச்சினைக்கும் தீர்வு கிடைத்துள்ளது. உத்தர பிரதேசத்தின் ஹாபுட் மாவட்டத்தில் ஒருகாலத்தில் பாய்ந்த நீம் என்ற நதி, அப்பகுதி மக்களின் தீவிர முயற்சியால் மீண்டும் உயிர் பெற்றுள்ளது.

நமது நோக்கம் நேர்மையாக இருந்தால் எத்தகைய இலக்கையும் எட்டிப்பிடிக்க முடியும். அந்த வகை யில், வரும் 2025-ம் ஆண்டுக்குள் இந்தியாவில் இருந்து காசநோயை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க, அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட அழைப்பு விடுக்கிறேன்.

காசநோய் ஒழிப்பில் நிக்சய் மித்ரா என்ற அமைப்பு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த அமைப்பினர் ஆயிரக்கணக்கான காசநோயாளிகளை தத்தெடுத்து பராமரித்து வருகின்றனர். இன்று நாடு முழுவதும் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த புண்ணியச் செயலுக்கு வித்திட்ட நிக்சய் மித்ராவின் 85,000 உறுப்பினர்களையும் பாராட்டுகிறேன்.

இமாச்சலப் பிரதேசத்தை சேர்ந்த 7 வயது சிறுமி நளினி தனது சேமிப்புத் தொகை மூலம், காசநோயால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்து வருகிறாள். இதேபோல, ஏராளமான சிறுவர்கள் காசநோய் ஒழிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் இதயத்தின் ஆழத்தில் இருந்து வாழ்த்துகிறேன்.

**ஆசிரியர் உருவாக்கிய வனம்**

கேரளாவை சேர்ந்த ஆசிரியர் ராமநாதன், ஒரு சிறிய மியாவாக்கி வனத்தை உருவாக்கி, 'வித்யாவனம்' என்று பெயர் சூட்டியுள்ளார். அங்கு



EVA STALIN IAS ACADEMY

நூற்றுக்கணக்கான மூலிகைகள், தாவரங்கள், இருக்கின்றன. வனத்தை பராமரிக்க அவரது மாணவர்கள் உதவுகின்றனர்.

சர்வதேச யோகா தினம் ஜூன் 21-ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. உலகம் ஒரு குடும்பம் என்பதே இந்த ஆண்டு யோகா தினத்தின் கருப்பொருள்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. சபை தலைமையகத்தில் நடைபெறும் யோகா தின விழாவில் நான் பங்கேற்கிறேன்.

**யோகாவை கடைபிடியுங்கள்**

நாட்டு மக்கள் அனைவரும் கண்டிப்பாக யோகாவை கடைபிடிக்க வேண்டுகிறேன். யோகாவுடன் இணையும்போது உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும்.

நாடு முழுவதும் உள்ள ஆளுநர் மாளிகைகள் தற்போது சமூக மற்றும் வளர்ச்சி பணிகளோடு தொடர்பு உடையதாக மாறிவிட்டன. காசநோய் இல்லாத இந்தியா, இயற்கை விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆளுநர் மாளிகைகளில் நடைபெறுகின்றன. குஜராத், கோவா, தெலங்கானா, மகாராஷ்டிரா, சிக்கிம் மாநிலங்களின் நிறுவன தினம், ஆளுநர் மாளிகைகளில் உற்சாகமாக கொண்டாடப்பட்டன. 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற உணர்வுக்கு இது வலுசேர்க்கிறது.

1975-ம் ஆண்டு ஜூன் 25-ம் தேதியை மறக்க முடியாது. இந்த நாளில்தான் நாட்டில் அவசரநிலை பிறப்பிக்கப்பட்டது. இது இந்திய வரலாற்றில் கறுப்பு அத்தியாயம் ஆகும். அவசரநிலையை எதிர்த்த பல லட்சம் மக்களுக்கு எதிராக கொடுமைகள், அநீதிகள், சித்ரவதைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. எத்தனை துன்பத்துக்கு அவர்கள் ஆளானார்கள் என்பதை நினைக்கும்போது மனம் கொந்தளிக்கிறது.

நாட்டின் சுதந்திரத்தை ஆபத்துக்கு உள்ளாக்கிய இத்தகைய குற்றங்கள் குறித்த மீள்பார்வை அவசியம். இதன்மூலம், ஜனநாயகத்தின் மகத்துவத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் இளைய தலைமுறையினர் புரிந்துகொள்ள முடியும். இவ்வாறு பிரதமர் பேசினார்.

## இந்தோனேஷிய ஓபன் பாட்மிண்டன் | இந்தியாவின் ஷிராக், சாட்விக் சாய்ராஜ் ஜோடி சாம்பியன் பட்டம் வென்று சாதனை




**ஜகார்த்தா:** இந்தோனேஷிய ஓபன் பாட்மிண்டனில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தது.

1000 புள்ளிகள் கொண்ட இந்தோனேஷிய ஓபன் பாட்மிண்டன் தொடர் ஜகார்த்தா நகரில் நடைபெற்றது. இதன் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் நேற்று உலகத் தரவரிசையில் 6-வது இடமும், பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டில் தங்கப் பதக்கமும், கடந்த ஆண்டு நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப்பில் வெண்கலப் பதக்கமும் வென்ற இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடியானது உலக சாம்பியனான மலேசியாவின் ஆரோன் சியா, சோ வூய் யிகா ஜோடியை எதிர்த்து விளையாடியது.

43 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி 21-17, 21-18 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஆகியோர் ஆயிரம் புள்ளிகள் கொண்ட சூப்பர் தொடரின் ஆடவர் இரட்டையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்திய ஜோடி என்ற வரலாற்று சாதனையை படைத்தனர்

ஆடவர் ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீரரான டென்மார்க்கின் விக்டர் ஆக்செல்சன் 21-14, 21-13 என்ற கணக்கில் 2-ம் நிலை வீரரான இந்தோனேஷியாவின் அந்தோனி சினிசுகா ஜின்டிங்கை வீழ்த்தி கோப்பையை வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவிவில் 4-ம் நிலை வீராங்கனையான சீனாவின் சென் யு 21-18, 21-19 என்ற நேர் செட்டில் 6-ம் நிலை வீராங்கனையான ஸ்பெயினின் கரோலின் மரினை வீழ்த்தி சாம்பியன்

EVA STALIN IAS ACADEMY

பட்டம் வென்றார். மகளிர் இரட்டையர் பிரிவில் கொரியாவின் பேக் ஹா நா, லீ சோ ஹீ ஜோடி 22-20, 21-10 என்ற செட் கணக்கில் ஜப்பானின் யூகி ஃபுகுஷிமா, சயகா ஹிரோடா ஜோடியை வீழ்த்தி பட்டம் வென்றது.

**இந்தியாவில் செமிகண்டக்டர் ஆலை அமைக்க அமெரிக்க மைக்ரான் டெக்னாலஜிஸ் ரூ.8,200 கோடி முதலீடு**




**புதுடெல்லி:** அமெரிக்காவின் மைக்ரான் டெக்னாலஜிஸ் உலகின் முன்னணி செமிகண்டக்டர் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். இந்நிறுவனம் கம்ப்யூட்டர், மொபைல்போன் பயன்பாடுகளுக்கான மெமரி சேகரிப்பு பாகங்கள் தயாரிப்பில் கவனம் செலுத்தி வருகிறது.

தற்போது இந்நிறுவனம் இந்தியாவில் செமிகண்டக்டர் ஆலை அமைக்க 1 பில்லியன் டாலர் (ரூ.8,200 கோடி) முதலீடு செய்ய இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த வாரம் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா செல்ல உள்ளார். அப்போது இந்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

மைக்ரான் டெக்னாலஜிஸ் நிறுவனம், அதற்கு தேவையான செமிகண்டக்டரை அதன் சீன ஆலையிலிருந்து பெற்று வருகிறது. சீனா தவிர்த்து, வேறு நாடுகளில் ஆலை அமைக்க திட்டமிட்ட அந்நிறுவனம், இந்தியாவில் ஆலை அமைக்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலக நாடுகள் மின் வாகனங்களை ஊக்குவிக்கும் நிலையில், செமிக்கண்டக்டர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. இந்தியா அதன் பயன்பாட்டுக்கான செமிகண்டக்டர்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வந்த நிலையில், உள்நாட்டிலேயே செமிகண்டக்டர் தயாரிப்பு கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியுள்ளது.

இதுதொடர்பாக வெளிநாட்டு நிறுவனங்களிடம் மத்திய அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், மைக்ரான் டெக்னாலஜிஸ் நிறுவனம் இந்தியாவில் செமிகண்டக்டர் ஆலை அமைக்க முதலீடு செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. குறைந்தபட்சம் 1 பில்லியன் டாலர் முதல் அதிகபட்சம் 2 பில்லியன் டாலர் வரையில் இந்நிறுவனம் இந்தியாவில் முதலீடு மேற்கொள்ள வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

பிரதமர் மோடியின்அமெரிக்க பயணத்தில் இந்த முதலீட்டு ஒப்பந்தம் கையெழுத்தானால், செமிகண்டக்டர் தயாரிப்பு தொடர்பான இந்தியாவின் முயற்சியில் முக்கிய முன்னகர்வாக இருக்கும்.இந்த முதலீடு மூலம் ஆயிரக்கணக்கில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

EVA STALIN IAS ACADEMY